ந.க.எண். 8018/2007 உ1

பேரூராட்சிகள் ஆணையரகம்,
குறளகம், சென்னை – 108

நாள்:14.02.2008

**சுற்றறிக்கை**

பொருள் : பேரூந்து நிலையம் – பேரூராட்சிகள் ஆணையரகம் – மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான பேரூராட்சிகளில் பேரூந்து நிலையங்கள் சரிவர பராமரிக்கப்படாதது – அறிவுரைகள் வழங்கப்படுகிறது.–

பேரூராட்சிகளிலுள்ள பெரும்பாலான பேரூந்து நிலையங்களின் அவலநிலை குறித்து அவ்வப்போது நாளிதழ்களில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. பேரூராட்சிகளின் பேரூந்து நிலைய கட்டிடங்கள் கட்டுவதற்கு தமிழக அரசின் நிதி நிறுவனங்களில் கடனுதவி பெற்றே கட்டப்பட்டதாகும். ஆனால், கட்டிடங்கள் முறையாக பராமரிக்கப்படாததால், கடன் பெறும் போது பேரூராடசி மன்றத்தால் உத்தேசிக்கப்பட்ட வருவாய் ஈட்ட முடியாமல் கடன் தவணையினை (அசல் மற்றும் வட்டி) திரும்ப செலுத்த இயலவில்லை. இதற்கு முக்கிய காரணம் பேரூந்து நிலையங்களில் கழிப்பிடம், குடிநீர் வசதி, மின் விளக்குகள், பயணிகள் தங்குமிடம் மற்றும் பேரூந்து நிலைய ஓடு தளங்கள் சரிவர பராமரிக்கப்படாததாகும். இத்தகைய சூழ்நிலையில் பேரூந்துகள் பேரூந்து நிலையத்திற்குள் செல்ல முடியாமல் சாலை ஓரங்களில் நின்று செல்லும் நிலை ஏற்படுகிறது. இந்நிலையினை தவிர்க்க பின்வரும் நெறிமுறைகள் வெளியிடப்படுகிறது.

1. பேரூந்து நிலைய நுழைவு வாயில் / திரும்ப செல்லும் வழி சிறப்பாக அமைக்கப்பட வேண்டும்.
2. பாதுகாக்கப்பட்ட குடிநீர் (குளோரின் கலந்த குடிநீர் வசதி) செய்யப்படவேண்டும். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அவ்வப்போது முறையாக சுத்தம் செய்யப்பட வேண்டும். பயனாளிகள் குடிப்பதற்கு ஏதுவாக குடிநீர் குழாய் (Tap) சரியான உயரத்தில் அமைத்தல் வேண்டும். தேவையான இடங்களில் குடிநீர் குழாயில் டம்ளர் சங்கிலியுடன் இணைத்து அமைக்கப்பட வேண்டும்.
3. பேரூந்து நிலையத்தில் கழிப்பிடங்கள் ஆண்/பெண் இரு பாலாருக்கும் தனித்தனியே அமைக்கப்பட வேண்டும். கழிவறை கதவுகள் / கிளாசெட்டுகள் முறையாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். தண்ணீர் குழாய் கசிவு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். போதுமான தண்ணீர் வசதி செய்து தரப்பட வேண்டும். ஆண்/பெண் கழிவறைகளில் ஆண்/பெண் படங்கள் ஒட்டப்பட்டு தமிழ் / ஆங்கிலத்தில் எழுதப்படவேண்டும்.
4. நவீன கழிப்பிடங்கள் கட்டப்பட்டு குத்தகைதாரர் மூலம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். கழிவறைகளை ஆசிட் மூலம் சுத்தம் செய்வதை தவிர்க்க வேண்டும். தரை வழுக்காமல் இருக்குமாறு அமைக்க வேண்டும்.
5. தேவைப்படும் இடங்களில் மின் விளக்குகள் வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும். மின் விளக்குகள் கழிவறைகள், ஓய்வறை மற்றும் பிற இடங்களில் எரிவதை உறுதி செய்ய வேண்டும்.
6. குளியறைகளில் மின் விளக்குகள்/ கதவு மற்றும் தண்ணீர் கசிவு இல்லாமல் பராமரிக்க வேண்டும். போதிய தண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
7. பயணிகள் தங்குமிடம் இருக்கை வசதிகளுடன் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். ஓய்வு அறைகள் தூய்மையாக பராமரிக்கப்பட வேண்டும். பேரூந்து நிலைய பெஞ்சுகள் முறையாக பராமரிக்க வேண்டும்.
8. பொருட்கள் பாதுகாப்பு அறை (Cloak Room) கட்டப்பட்டு குத்தகைதாரர் மூலம் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.
9. பேரூந்துகள் புறப்படும் நேரம், தடம் எண் மற்றும் போய்ச்சேரும் இடம் ஆகியவை அறிவிப்பு பலகையில் குறிப்பிடப்பட வேண்டும். மேலும், பஸ் நிற்குமிடத்தில் பேரூந்து தடத்தின் பெயர் எழுதப்பட வேண்டும்.

10. பேரூந்து நிலையத்தின் பரப்பளவு, பேரூந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேரூந்துகளின் எண்ணிக்கை மற்றும் பொதுமக்கள் கூட்டம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தேவைப்படின் உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்கலாம்.

11. பேரூந்து நிலையத்தில் போடப்படும் குப்பைகள் மற்றும் தேவையற்ற பொருள்கள் ஆகியவை அவ்வப்போது அகற்றப்பட வேண்டும்.

12. பேரூந்து நிலையத்தில் தேவைப்படின் இரவு காவலர் ஒருவரை நியமனம் செய்யலாம்.

13. பேரூந்து நிலைய ஓடுதளத்தை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றப்பட வேண்டும். பேரூந்து நிலைய கூரைகள் மழைக்காலத்தில் ஒழுகாதவாறு சீர் செய்ய வேண்டும்.

14. பேரூந்து சுங்க வசூல் குத்தகை அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டும். குத்தகைதாரர் பெயர், சிற்றுந்து/ பேரூந்து கட்டண விகிதம் குறித்து விளம்பர பலகையில் குறிப்பிட வேண்டும்.

15. பிரதான சாலை வழியாக வரும் பேரூந்துகள் பேரூராட்சி பேரூந்து நிலையம் அருகாமையில் இருப்பின் அனைத்து பேரூந்துகளும் அதற்குள் வந்து செல்லும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இதனால் பேரூந்து நிலைய சுங்க வசூல், கடைகள் மற்றும் சிற்றுண்டி விடுதி/ உணவு விடுதி மூலம் கிடைக்கப் பெறும் வருவாய் கணிசமான அளவுக்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

16. பேரூந்து நிலையத்தின் அருகில் இரு சக்கரம்/ நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் தேவைக்கேற்ப கட்டப்பட்டு கட்டணங்கள் வசூலிக்கலாம்.

17. பேரூராட்சியின் திட்டங்கள், போலியோ/ எச்.ஐ.வி/ எய்ட்ஸ் நோய்குறித்து கட்டிடங்களின் சுவர்களில் எழுதப்பட வேண்டும். இதில் பேரூராட்சியின் தொலைபேசி எண்/ காவல் தொலைபேசி எண் குறிப்பிட வேண்டும்.

18. பேரூந்து நிலைய கடைகள், சிற்றுண்டி விடுதி, உணவு விடுதி ஆகியவை அனைத்தும் குத்தகைக்கு விடப்பட வேண்டும். முதலில் குத்தகைக்குவிடும் போது பொது ஏலம் மூலமாகவும், பின்னர் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவீதம் குத்தகையை உயர்த்தி நிர்ணயிக்க வேண்டும்.

19. கட்டிடங்கள் முறையாக வெள்ளையடித்து/ வண்ணபூச்சு செய்யப்பட்டு கட்டிடங்களை பாதுகாக்க வேண்டும்.

20. பேரூந்து நிலைய கடைகளின் குத்தகைதாரர்கள் தங்களின் கடைகளுக்கு எதிரே உள்ள பகுதி வரை ஆக்கிரமித்து இடையூறு செய்வதை தடுக்க வேண்டும். மீறுபவர்கள் மீது உரிய மேல்நடவடிக்கை அல்லது அபராதம் விதிக்க வேண்டும்.

21. குத்தகைதாரர் தன் சகாக்களுடன் பேரூந்து நிலையத்தில் அனுமதியற்ற வியாபாரம் நடத்துவதை தடுக்க வேண்டும். ஒப்பந்த பத்திரத்தில் உரிய நிபந்தனைகள் விதிக்க வேண்டும்.

22. பேரூந்து நிறுத்துமிடத்தில் அரசு பேரூந்துகள் / தனியார் பேரூந்துகளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் நிறுத்தப்படவேண்டும்.

23. பேரூந்து நிலையத்தின் தளத்தில் மேடுபள்ளங்கள் இல்லாமல் பராமரிக்க வேண்டும்.

24. செயல் அலுவலர் பேரூந்து நிலையத்தை முறையாக ஆய்விடப்படாமல் பேரூந்து நிலையம் பராமரிப்பின்றி சமூக விரோதிகளின் கூடாரமாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தவறாமல் செயல் அலுவலர்கள் பேரூந்து நிலையத்தை பார்வையிட்டு முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

25. பேரூந்து சாலையின் நடுவில் (Median) அமைந்துள்ள பசும்புறகள்/ செடிகளை பொதுமக்கள் மற்றும் தனிநபர் பங்கேற்பின் மூலம் பராமரிக்கப்பட வேண்டும்.

26. நேரக்காப்பாளர் அறை உரிய வசதியுடன் கட்டப்பட வேண்டும்.

27. பேரூந்து நிலையத்தில் ஊனமுற்றோரின் வசதிக்காக சாய்தளம் (Ramp) அமைக்கப்பட வேண்டும். கழிவறைகளிலும் தேவையினடிப்படையில் சாய்தளம் அமைக்கப்பட வேண்டும்.

28. இலவச சிறுநீர் கழிப்பிடம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

29. பேரூந்து நிலைய கழிவறைகளுக்காக உரிய கொள்ளளவு கொண்ட செப்டிக் டேங்க் தவறாமல் அமைக்கப்படவேண்டும், முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

30. பேரூந்து நிலைய கடைக்காரர்கள் குப்பைகளை தரம்பிரித்து தரும்படி கட்டாயப்படுத்த வேண்டும்.

31. சிற்றுண்டி விடுதி / உணவு விடுதிகளில் தயாரிக்கப்படும் உணவுகளை, பொதுச்சுகாதார அலுவலர் / சுகாதார ஆய்வாளர்களால் மாதிரிகள் (Samples) எடுக்கப்பட்டு ஆய்வுக்கூடத்தில் சோதனை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

32. குடிநீர் பாக்கெட் மற்றும் பாட்டில்கள் ஐ.எஸ்.ஐ. முத்திரை மற்றும் காலாவதி நாள் (Expiry Date) குறிப்பிட்டுள்ளதா ? என்பதை பொதுச் சுகாதார அலுவலருடன் ஆய்விட்டு தரமற்றதை அழிக்கப்பட வேண்டும் மற்றும் தரமான குடிநீர் வழங்கலை உறுதி செய்ய வேண்டும்.

33. பேரூந்து நிலைய கட்டிடங்களின் உறுதி தன்மையை உரிய அலுவலரால் சான்று பெறப்பட வேண்டும்.

எனவே, மேற்கூறிய அறிவுரைகளை கண்டிப்பாக பின்பற்றி பேரூராட்சி பேரூந்து நிலையங்கள் முதியோர், குழந்தைகள் மற்றும் அனைத்து தரப்பு பயணிகளும் மகிழ்ச்சியாக பயணிக்கவும், பேரூந்து நிலையம் பேரூராட்சிக்குப் பெருமை, பார்த்தவுடன் பெயர் தானே வரும் என்ற அளவில் பராமரிக்கப்பட வேண்டும்.

இச்சுற்றறிக்கை கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் உடன் அளிக்கப்பட வேண்டும்.

**ஒம்/– கே.கோபால்**
ஆணையர்

பெறுநர்

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், அனைத்து மண்டலம்.
2. அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்